# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 19.02.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸீப்** என்ற ஒரு சொல் உள்ளது. அதன் பொருள் கணக்கெடுப்பவன், நியாயமான முறையில் அவரவர் கணக்கிற்கேற்ப நற்கூலி வழங்குபவன்; போதுமானவன் என்பதாகும். இந்த சிறப்புப் பண்பு முழுமையான முறையில் எந்தவொரு முழுமையாக காண இயலாது. இவ்விஷயங்களில் ஒருவர் முழுமையாக இருக்கிறார் எனில், அது இறைவன் மட்டும்தான். அவனே நமது பல்வேறு நிலைமைகளை கருத்தில் கொண்டு அதற்கேற்ப தனது இப்பண்பை தேவைக்கேற்ப வெளிப்படுத்தியுள்ளான். இப்போது சில வசனங்களை எடுத்து வைப்பேன். அதில் அல்லாஹ்வுடைய **ஹஸீப்** – கணக்கெடுப்பவன் என்ற பண்பு பல்வேறு கட்டளைகளுடன் அல்லது எச்சரிக்கை செய்தவாறும் கூறப்பட்டுள்ளது.

**முதலில் சூரா அந்நிஸாவின் 87வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

**வஇஸா ஹுய்யீ(த்)தும் ப(த்)தஹிய்யத்தின் ஃஹய்யூ பிஅஹ்ஸன மின்ஹா அவ்ரு(d)த்தூஹா. இன்னல்லாஹ கான அலா குல்லி ஷய்யின் ஹஸீ(b)பா** – உங்களுக்கு யாரேனும் நல்வாழ்த்துத் தெரிவித்தால் அதனை விடச் சிறந்த முறையில் வாழ்த்துங்கள் அல்லது (குறைந்தது) அதனையே திருப்பிக் கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் கணக்கெடுப்பவனாவான். (4:87)

இந்த வசனத்தில் இஸ்லாமிய கட்டளையின் ஓர் அடிப்படை கட்டளை விளக்கப்பட்டுள்ளது. அதில் நம்முடைய அமைதிக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டு இருந்தது மட்டுமின்றி மற்றவருடன் தொடர்பை விரிவுபடுத்துவதற்கும் இதில் ஈடற்ற முன்மாதிரி உள்ளது. இந்த வசனத்தில் முஸ்லிம்களுக்கு ஒருவர் மற்றவருடன் நல்லுணர்வை வெளிப்படுத்துவதற்கும் நற்போதனை செய்யப்பட்டுள்ளது. ஒருவர் மற்றவரை சந்திக்கும் போது நல்லுணர்வை வெளிப்படுத்த வேண்டும்; சலாம் கூற வேண்டும். உங்களுக்கு மார்க்கம், உலகம் இரண்டையும் பெற்றுத் தருகிற துஆவை கற்றுத் தந்துள்ளது. மேலும் அதனை மற்றவருக்கு கூறும்போது அதைவிட சிறந்த வாழ்த்தைக் கூறுவது உங்கள் மீது ஒழுக்க மற்றும் சமூகக் கடமையாகும். இதனை நீங்கள் செய்யாவிட்டால் இறைவனிடம் பதில் சொல்ல வேண்டும். இந்த பெருமை இஸ்லாத்திற்கு மட்டுமே உள்ளது. ஒருவர் மற்றவரை சந்திக்கும் போது இந்த பொருள் பொதிந்த வார்த்தையாகிய **அஸ்ஸலாமு அலைக்கும்** என்று கூற வேண்டும். அன்பு, நேசத்தை ஒருவர் மற்றவருடன் பரிமாற வேண்டும். (உம்மீது அமைதி உண்டாகுக) என்று கூற வேண்டும். எல்லா வகையான பிரச்சனைகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் நீர் பாதுகாப்பாக இருப்பீராக. ஆழமான அன்புடன் இதனைக் கூறும் போது உள்ளத்தில் சகோதரத்துவம் நிலை பெறுகிறது. எல்லா வகையான வெறுப்பும் விலகிவிடுகிறது. அதேபோன்று ஸலாம் கூறும் போது அதனை விட சிறந்த மறுமொழி கூற வேண்டும். சிறந்த மறுமொழியாக **வஅலைக்கும் ஸலாம்** என்பதுடன் **ரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு** என்றும் சேர்த்து கூற வேண்டும். குறைந்தபட்சம் அவர் கூறியதையே திருப்பிக் கூற வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு நற்கூலி கிடைக்கும். இது சமுதாயத்தில் அமைதியை உருவாக்குகிற நடைமுறைச் சட்டமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் அழுத்தமான முறையில் முஸ்லிம்களுக்கு சலாம் கூறும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள் என்று வலியுறுத்தி உள்ளார்கள். சஹாபாக்கள் இவ்விஷயத்தில் ஒருவர் மற்றவரை முந்திச் செல்வதற்கு முயற்சி செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இவ்விஷயத்தில் மிகவும் கவனம் இருந்தது. சஹாபாக்களும் எந்த அளவுக்கு அதனை நடைமுறைப்படுத்தினார்கள் என்பது சில ஹதீஸ்களிலிருந்து தெரிய வருகிறது.

கல்தா பின் ஹம்பல் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ஸஃப்வான் பின் உமய்யா (ரலி) அவர்கள் என்னை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பாலும் சிறிது மான் குட்டியின் மாமிசமும் அன்பளிப்பாக கொடுத்து

அனுப்பினார்கள். அம்மனிதர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வீட்டினுள் ஸலாம் கூறாமலும், அனுமதி கேட்காமலும் நுழைந்து விட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அம்மனிதரிடம் முதலில் நீர் வெளியே செல்லும். உள்ளே வருவதற்கு அனுமதி கேட்டுவிட்டு உள்ளே வாரும் என்று கூறினார்கள்.

அம்மனிதர் அப்போது சிறுவராகவே இருந்தார். சிறுவர்தானே அனுமதி பெறாமல் உள்ளே வந்ததில் எந்த தவறும் இல்லை என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கருதவில்லை. உடனே அவருக்கு அறிவுரை பகர்ந்தார்கள். உயர் நல்லொழுக்கத்தை முதலிலேயே குழந்தைகளுக்கு வழங்க வேண்டும். அனுமதியின்றி எவரது வீட்டுக்குள்ளும் செல்லக் கூடாது என்று புரிய வைக்க வேண்டும். எப்போதும் அனுமதி வாங்கியே செல்ல வேண்டும். இரண்டாவது சிறந்த வழி ஸலாம் கூறுவதாகும். அன்பு உருவாக்கத்தக்க முறையில் ஸலாம் கூற வேண்டும். உங்களின் உள்ளத்தில் அவருக்காக துஆ வெளிப்பட வேண்டும். எதிரில் இருப்பவருக்கும் இவர் மீது துஆ வெளிப்பட வேண்டும். பரஸ்பரம் துஆவின் தொடர் உருவாக வேண்டும். இவ்வாறு துஆவுடன் ஸலாம் வெளிப்படும் போது மற்றவரின் தரப்பிலிருந்து அதே துஆ திருப்பித் தரப்படுகிறது.

பிறகு சஹாபாக்களின் கட்டாய சூழ்நிலைக்காக கடைத்தெருவில் நிற்கவும் அமரவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்ட போது, கடைத் தெருவுக்குரிய உரிமை தர வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். அதாவது கடைத்தெருவில் செல்பவர்களுக்கு ஸலாம் கூற வேண்டும் என்று கூறினார்கள். ஏனெனில் ஒரு மூஃமின் மற்றவரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். முஸ்லிம்கள் சிந்தித்துப் பார்த்தால் இஸ்லாத்தின் இந்த கட்டளை மட்டுமே அன்பு, பிரியம், நேசத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. ஆனால் துர்பாக்கியத்தினால் இறைவனது போதனையை மறந்து ஒருவர் மற்றவரது கழுத்தை வெட்டிக் கொண்டிருக்கின்றனர்.

சஹாபாக்கள் இவ்விஷயத்தில் எவ்வளவு கவனமாக இருந்தார்கள் எனில் ஒருநாள் ஒரு சஹாபி இன்னொரு சஹாபியிடம் வந்து, வாருங்கள்! பஸாருக்குப் போவோம் என்றார். கடை வீதிக்கு சென்று சுற்றி விட்டு எதுவும் வாங்காமல் திரும்பி வந்து விட்டார். சில நாட்கள் கழித்து அதே சஹாபி மற்ற சஹாபியிடம் அதேபோன்று வாருங்கள் பஸாருக்குப் போவாம் என்று கூறினார். மற்றவர், ஏதாவது வாங்குவதாக இருந்தால் போகலாம். வெறுமனே பஸாருக்குப் போய் விட்டு திரும்பி வருவதில் என்ன பயன்? என்று கேட்டார். முதல் சஹாபி கூறினார். பஸாருக்கு சென்று மற்றவர்களுக்கு சலாம் கூறி அவர்களுக்காக துஆ செய்யவும், மற்றவரின் ஸலாமையும் துஆவையும் வாங்குவதற்காகவுமே செல்கிறேன். மேலும் ஸலாம் கூறும் வழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கட்டளையின்படி அமல் செய்யவும் செல்கிறேன்.

இதுவே சஹாபிகளின் நிலையாக இருந்தது. ஒவ்வொரு சிறிய கட்டளையின்மீதும் சிரமத்துடன் அமல் செய்ய முயற்சி செய்தனர். அஹ்மதிகள் குறிப்பாக இதன்பக்கம் கவனம் செலுத்த வேண்டும். சிறந்த பதிலைத் தருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதுவே நமது சமூகத்தில் அமைதியை உருவாக்கும். மற்றவரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதன் பக்கம் கவனத்தை ஏற்படுத்தும்.

அல்லாஹ் கூறுகின்றான்: மற்றவருக்கு அமைதியின் தூதுச் செய்தியை அனுப்பும் செயலுக்கு பிரதிபலன் கிடைக்கும். அன்புடன் கரம் பற்றி, துஆவுக்கு துஆவினாலேயே பதில் கொடுப்பீர்கள் எனில் அல்லாஹ்விடமிருந்து வெகுமதி பெறுவீர்கள். அதனை மறுப்பீர்கள் எனில் அல்லாஹ்விடம் தண்டனைக்கு ஆளாவீர்கள். அல்லாஹ் இதற்காக கணக்கெடுப்பேன் என்று கூறுகிறான்.

இக்காலத்தில் அமைதிக்கு உத்திரவாதம் வழங்கியவாறு அல்லாஹ்விடமிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றினார்கள். அவர்கள் உலகத்தின் அமைதி, நன்மைக்காக தமது நூல்களின் மூலம் தூது விடுத்துள்ளார்கள். ஆனால் உலகத்திலுள்ள மக்கள் குறிப்பாக பெரும்பாலான முஸ்லிம்கள் அதற்கு எந்த எந்த பதிலும் தரவில்லை. அழகான அன்பளிப்பால் அதற்கு பதிலாக அளிப்பதற்கு பதில் ஏச்சுப் பேச்சுக்களைத்தான் திருப்பித் தந்தார்கள். நான் இறைவன் புறமிருந்து வந்துள்ளேன்; உங்கள் நன்மைக்காகவே வந்துள்ளேன். உங்களை இறைவனுடன் சேர்ப்பதற்காக வந்துள்ளேன் என்று கூறியும் கூட மற்ற சமுதாயத்தினருடன் சேர்ந்து கொண்டு முஸ்லிம்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எதிர்க்கத் தொடங்கினர்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உலகின் நன்மைக்கான தூதுச் செய்தியை கொண்டு வந்தார்கள். அவர்களின் முன்னறிவிப்பை உண்மைப்படுத்துபவர்களாக முஸ்லிம்கள் ஆகியிருக்க வேண்டும். காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய நன்மைகளைப் பரப்புவதில் அவருக்கு உதவி செய்திருக்க வேண்டும். இஸ்லாத்தின் வெற்றிக்குரிய நாளை அருகில் கொண்டு வருவதற்கு உதவி செய்திருக்க வேண்டும். ஆனால் இதற்கெல்லாம் நேர் எதிராக பெயர் தாங்கி உலமாக்களின் பின்னால் சென்று முஸ்லிம் மக்கள் முற்றிலுமாக குர்ஆனின் போதனைகளை மறந்து விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய போதனைகளை மறந்து விட்டனர். மறந்தது மட்டுமல்ல; நான் கூறியதுபோன்று அமைதிக்குப் பதிலாக கடுமையைக் காட்டினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் அனுதாபமும் முஸ்லிம்களின் நலன்களை நாடுபவர்களாகவும் இருந்தார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இன்று நான் சான்றுகளைப் பூர்த்தியாக்க விரும்புகிறேன். எதிரிகள், மறுப்பவர்கள் ஆகியவர்களுக்காக நான் நாற்பது பிரசுரங்களை வெளியிட உள்ளேன். கியாமத் நாளில் அந்த ஏகனின் முன்னால் எந்த நோக்கத்திற்காக நான் அனுப்பப்பட்டேனோ அதனை முழுமைப்படுத்தினேன் என்று ஒப்புக் கொள்ளப்படுவதற்காக இதனை நான் செய்யப் போகிறேன். எனவே நான் மிகவும் பணிவுடனும் மரியாதையுடனும் முஸ்லிம் உலமாக்கள், கிறித்தவ அறிஞர்கள், பண்டிதர்கள், இந்துக்கள், ஆரியர்கள் ஆகிய அனைவருக்கும் நான் இந்த பிரசுரத்தை அனுப்புகிறேன். நல்லொழுக்கக் கொள்கைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றில் காணப்படுகின்ற தவறுகளையும் பலவீனங்களையும் சீர்திருத்துவதற்காக நான் உலகில் அனுப்பப்பட்டுள்ளேன். உலகில் அனுப்பப்பட்டுள்ளேன். நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக்கப்பட்டுள்ளேன். அசாதாரணமான அடையாளங்கள் மற்றும் தூய போதனைகளின் மூலம் சத்தியத்தை உலகில் பரப்ப வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளேன். மார்க்கத்தைப் பரப்புவதற்காக வாளை எடுப்பதை எதிர்க்கிறேன். மார்க்கத்தின் பெயரால் அல்லாஹ்வின் அடியார்களின் இரத்தம் சிந்தப்படுவதை (நான்) எதிர்க்கிறேன். முடிந்தவரை நல்லொழுக்கம், சகிப்புத்தன்மை, நேர்மை, மன்னிக்கும் தன்மை ஆகியவற்றின் குறைபாடுகளை முஸ்லிம்களிடமிருந்து அகற்றுவதற்காக நான் நியமிக்கப்பட்டுள்ளேன்.

எல்லா முஸ்லிம்கள், கிறித்தவர்கள், இந்துக்கள், ஆரியர்கள் அனைவரிடமும் கூறிக் கொள்கிறேன். உலகில் எவரும் எனது எதிரியல்ல; நான் மனித குலத்திடம் ஒரு தாய் தனது குழந்தையிடம் காட்டும் அன்பை விட அதிகமாக அன்பு காட்டுகிறேன்.

மனிதகுலத்தின் மீது அனுதாபம் காட்டுவது எனது கடமையாகும். பொய், ஷிர்க், ஒவ்வொரு தீய செயல், அநீதி, தீயவற்றிலிருந்து விலகுவதற்காக மக்களை விழிப்பூட்டுவது ஆகியவை எனது கொள்கையாகும். எனது அனுதாபத்தின் அசல் நிலை இதுவேயாகும். எனக்கு ஒரு தங்கச்சுரங்கம் கிடைத்துள்ளது. மேலும் விலை மதிக்க முடியாத ஒரு உன்னதமான வைரமும் கிடைத்துள்ளது. அந்த வைரத்தை நான் மக்களுக்கு பங்கிட்டு கொடுத்தால் அதனைப் பெறுகிற ஒவ்வொருவரும் இன்று உலகில் அதிகமாக தங்கம், வெள்ளிகளை வைத்துள்ள அனைத்து செல்வந்தர்களையும் விட பெரும் செல்வந்தர்களாகி விடுவர். அந்த உன்னதமான வைரம் உண்மையான இறைவன் ஆவான். அவனை கண்டறிந்து அவன் மீது உண்மையான ஈமான் கொள்ளுதல் உண்மையான முஹப்பத்துடன் அவனிடம் தொடர்பு கொள்ளுதல், உண்மையான பரக்கத்துகளை அவனிடமிருந்து பெறுதல் இதுவே எனது அந்த விருப்பமாகும். இத்தகைய செல்வத்தைப் பெற்ற நான் மனிதகுலத்தை அதிலிருந்து தடுத்து வைப்பது பெரும் அநீதியாகும். என்னால் அதனை ஒருபோதும் செய்ய முடியாது. எனது உள்ளம் இந்த வறியோர், பசியுடையோரைக் கண்டு நிலை குலைகிறது. அவர்களது இருள், துன்பத்தைக் கண்டு எனது உயிர் துடிக்கிறது. ஆன்மீக செல்வத்தால் அவர்களின் வீட்டை நிறைக்க வேண்டும் என்று விரும்புகிறேன். உண்மை மற்றும் நிச்சய உறுதியின் வைரத்தைக் கொண்டு அவர்களை நிரப்ப விரும்புகிறேன்.

உலகின் சமாதானம், நன்மைக்கான உணர்வை இவ்வாறு அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். உலகத்திற்கு உண்மையை வழங்குவதற்காக எந்த அளவுக்கு அனுதாபத்தை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்!

எனவே, **இன்னல்லாஹ கான அலா குல்லி ஷய்யின் ஹஸீபா** – நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் கணக்கெடுப்பவனாவான். (4:87) என்று கூறியதற்கேற்ப அல்லாஹ் ஒவ்வொன்றின் கணக்கையும் எடுப்பவனாவான். எதிரிகளிடம் அவன் எவ்வாறு கணக்கெடுப்பான் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வார்த்தைகளை அவர்கள் நம்பாதது மட்டுமின்றி எதிர்ப்பிலும் தீவிரம் காட்டுகின்றனர். அரசுகளும் அதில் அடங்கும். ஆனால் முஸ்லிம்கள் சற்று சிந்தித்தால் என்னென்ன பிரச்சனைகள், ஆபத்துகளில் அவர்கள் கடந்து செல்கின்றார்கள் எனில், சில இடங்களில் அதனால் இழிவும், தோல்வியும் அடைகின்றனர். இது நிச்சயமாக பயத்தை ஏற்படுத்துகிறது. சிந்திக்கவும், ஆய்வு செய்யும் பழக்கமும் இருந்தால் மட்டுமே தப்பிக்கலாம்.

உலகிலேயே இறைவன் இவர்களிடம் கணக்கெடுக்கத்தான் தொடங்கி விட்டான். சிறந்த உம்மத்தாக இருந்தும் நாம் மற்றவருக்கு முன் கை நீட்டும் நிலைக்கு ஆளாகி விட்டோம். இஸ்லாத்தின் எதிரி அரசுகள் இஸ்லாமிய அரசுகளை தமது விருப்பப்படி நடத்திக் கொண்டு செல்கின்றனர். இன்ஷா அல்லாஹ் இஸ்லாத்திற்கே வெற்றி கிடைக்கும் என்பது அஹ்மதிகளின் நம்பிக்கையாகும். அதுவும் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களுடைய உண்மை பேரன்பரின் மூலமாகவே நடக்கும். ஆனால் முஸ்லிம்களுக்கு தீவிரமான முறையில் கவனமூட்டுவதும் அஹ்மதிகளின் பணியாகும். முஹம்மதிய மஸீஹின் தூதுச் செய்தியை அவர்கள் புரிய வேண்டும்.

முஹம்மதிய மஸீஹின் தூய நல்லுணர்வுகளைப் புரிந்தவாறு அல்லாஹ்வுடைய கட்டளையை செயல்படுத்தும் பொருட்டு அன்னாரின் உணர்வுகளை உங்களிடமும் கொண்டு வாருங்கள். முழுமையான கட்டுப்படுதலை முஹம்மதிய மஸீஹிற்கு வழங்குவதே அந்த உணர்வுகளை உங்களிடம் திரும்பக் கொண்டு வருவதாகும். அன்னாரின் ஜமாஅத்தில் இணையும் போது தான் அந்த முழுமையான கட்டுப்படுதல் ஏற்படும். முஸ்லிம்களுக்கு எவ்வளவு ஆற்றல் கிடைக்கிறது என்று பிறகு பாருங்கள்!

இஸ்லாத்தின் சகோதரத்துவத்தின் தூதுச் செய்தி எவ்வளவு விரைவாக உலகில் பரவுகிறது என்று பிறகு பாருங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகச் சிறந்த போதனையை உலகின் நலனிற்காக கொண்டு வந்தார்கள். அதனை நாம் திரும்ப உலகில் நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் இந்நிலை உருவாகும். அந்தோ! முஸ்லிம்கள் இதனைப் புரிந்து கொண்டிருந்திருக்க வேண்டுமே! நாமும் இஸ்லாத்தின் வாழ்விற்கான தூதுச் செய்தியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மை தாசரின் பைஅத்தின் கீழ் வந்து அதனை மூலை முடுக்குகளில் பரவச் செய்ய பூரணமாக முயற்சி செய்ய வேண்டும். அது நமது கடமையும்கூட. இதுவே நமக்கு தரப்பட்ட பொறுப்பும் ஆகும். நமது எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எத்துணை தீவிரமாக இது குறித்த துயரம் கொண்டிருந்தார்கள் எனில் திருக்குர்ஆனில் அது குறித்து இறைவன் கூறியுள்ளான்.

**சூரா தவ்பாவின் 128 வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

**லக(d)த் ஜாஅ(k)கும் ரஸுலும் மின் அன்ஃபுஸி(k)கும் அஸீஸுன் அலைஹி மா அனித்தும் ஹரீஸுன் அலை(k)கும் (b)பில் முஃமினீன ரவூஃபுர் ரஹீம்** – (நம்பிக்கை கொண்டவர்களே!) உங்களிடம் உங்களிலிருந்தே ஒருவர் தூதராக வந்துள்ளார். உங்களுக்கேற்படும் துன்பம், அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது. அவர் உங்கள் நலனில் மிகுந்த ஆர்வங்கொண்டவராகவும், நம்பிக்கை கொண்டவர்களை நேசிப்பவராகவும், அவர்களுக்கு மிக்க கருணை காட்டுபவராகவும் இருக்கின்றார். (9:128)

இந்த வசனத்தின் (மூலம்), மூஃமின்கள், மூஃமின் அல்லாதவர்கள் ஆகிய இரு வகுப்பாரின் நலனிலும் அவர்களுக்கு (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு) அக்கறை இருந்தது.

நான் முதலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு மேற்கோளைப் படித்தேன். உண்மையில் தமது எஜமானரும் வழிகாட்டியுமாகிய ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றி தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதுபோன்ற ஒரு அன்பை வெளிப்படுத்தியிருந்தார்கள். இங்கு பாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனித குலத்தின் மீது பெரும் அனுதாபம் கொண்டிருந்தார்கள் என்பதை இறைவன் இவ்வாறு சுட்டிக் காட்டுகிறான். இறைவன் கூறுகிறான். அவர் உங்கள் நிலையைக் கண்டு பெரும் பதற்றம் அடைகிறார்.

எதிரிகள் துயரம் அடைந்திருக்கும் போதும் வருந்தினார்கள். இறைவன் கூறுகிறான்: நீங்கள் இந்த மாநபியின் மீது பலவகை துன்பங்களைக் கொடுத்தும், அவர்களை ஏற்றுக் கொண்டவர்களை துன்பப்படுத்தியிருந்தும் கூட உங்களுக்கு துன்பம் ஏற்பட்டால் அது அவருக்கு துன்பத்தை தருகிறது. நீங்களோ அவருக்கு உணவு, குடி தண்ணீர் ஆகியவற்றை தடுத்தல், அடித்தல், கொலை செய்தல் ஆகிய எந்த வாய்ப்பையும் கைவிட்டதில்லை. இருந்தும் கூட அந்த அறிவற்றவர்களுக்காகவும் – அநியாயக்காரர் –களுக்காகவும் அவர்களின் துயரம் கண்டு அன்னாரின் உள்ளம் துடித்தது.

எல்லா வகையான வரும்பு மீறல், கடுமைகள் குஃப்பார்களின் தரப்பிலிருந்து இழைக்கப்பட்ட போதிலும் அவர்கள் இந்த உளப்பூர்வமான அனுதாபத்தை உள்ளத்திலிருந்து போக்கவில்லை. இந்த அனுதாபத்தினாலேயே காஃபிர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

உங்களது நிலை கண்டு அந்தோ! நீங்கள் சீர்திருந்த வேண்டுமே என்று அவர் உள்ளம் வாடியது. அல்லாஹ்வுடைய பிடியில் இருந்த அம்மக்கள் தப்பிக்க வேண்டும் என்று துடித்தார்கள். இந்த உணர்வுதான் அந்த நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரை ஏற்றுக் கொண்டவர்களின் ஜமாஅத்திடமும் இருக்க வேண்டும். இந்த முயற்சிகளின் வெற்றிக்காக அல்லாஹ்விடம் பலன் தருமாறு துஆ செய்ய வேண்டும். அல்லாஹ்வின் உண்மைப் பேரன்பரின் ஜமாஅத்தில் இணைந்தது நமது நற்பேறாகும். நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளைக்கேற்ப சமாதானம் அமைதியின் உணர்வுகளை காலத்தின் இமாமுக்கு கொண்டு சேர்க்க வேண்டும். இந்த அடிப்படையில் உலகத்தின் மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக நன்மையின் வழிகாட்டியாகிய எஜமானரின் வழியில் முயற்சி செய்ய வேண்டும். இந்த நோக்கத்திற்காக அஹ்மதிகள் தமது உயிர், பொருள், கண்ணியம் ஆகியவற்றை தியாகம் செய்ய வேண்டும். மார்க்கத்திற்காக ஒருவர் தமது இல்லத்தை துறக்கிறார் எனில், இன்று அஹ்மதிகள் மட்டும்தான். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலைமையைப் பார்த்து, இறைவன் கூறினான். நீங்கள் பெரும் துன்பம் கொடுத்த போதிலும் அன்னார் அனுதாப உணர்வால் நிறைந்திருந்தார்கள்.

நீங்களும் எதிரிகள் மீது வெறுப்பின் நெருப்பை மூட்ட வேண்டாம். ஏனெனில் நீங்கள் காலத்தின் இமாமை ஈமான் கொண்ட காரணத்தால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உங்களுக்காக துஆ செய்துள்ளார்கள். கியாமத் வரை உண்மையான முஃமின்களுக்கு இந்த துஆ சேர்ந்து கொண்டேதான் இருக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது காலத்து முஃமின்களுக்கு மட்டும் ரவூஃபுர் ரஹீம் – நம்பிக்கை கொண்டவர்களை நேசிப்பவர், அவர்களுக்கு மிக்க கருணை காட்டுபவர் ஆக இருக்கவில்லை. மாறாக, இருள்நிறைந்த இரவுகளில் செய்த அன்னாரின் துஆக்கள் கியாமத் வரை உண்மையான முஃமின்களுக்கு வந்தடையக் கூடியதாக இருக்கிறது. அந்த துஆவிலிருந்து பங்கு பெறுவதற்கு தத்தமது தகுதிக்கேற்ப ஒருவருக்கொருவர் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும். மன்னிப்பையும் கருணையையும் தமது சகோதரரிடம் காட்ட வேண்டும். அதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடித்தளமிட்ட சமூகத்தை உருவாக்க முடியும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இறைவனது போர்வையின் கீழ் வரும்போது தான் அளவற்ற அனுதாப ஆற்றலும் வழங்கப்படுகிறது. அவர் அல்லாஹ்வின் நிழல் ஆகிறார். பிறகு படைப்பினங்களின் அனுதாபம், மேன்மைக்காக தமக்குள் ஒரு ஆர்வத்தைப் பெறுகிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்விஷயத்தில் எல்லா நபிமார்களை

விட மேன்மை பெற்று விளங்கினார்கள். எனவே அன்னாருக்கு படைப்பினங்களின் துன்பத்தை காண முடிந்ததில்லை.

**எனவே இறைவன் கூறுகின்றான்:**

**அஸீஸுன் அலைஹி மா அனித்தும்** – உங்களுக்கு ஏற்படும் துன்பம், அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது. (9:128). எனவே **ஃபத்தபிவூனி** – என்னைப் பின்பற்றுங்கள் (3:32) என்ற கட்டளையின் கீழ் தத்தமது தகுதிக்கேற்ப நமக்கு பொறுப்புகள் உள்ளன. இந்த உணர்வை தமக்குள் உருவாக்க முயற்சி செய்யுங்கள்.

**அல்லாஹ் சூரா தவ்பாவின் கடைசி வசனத்தில் கூறுகின்றான்:**

நபியே! உமது அனுதாபம், தூதுச் செய்தியை எட்ட வைத்தல் ஆகியவை குஃப்பார்களின் மீது எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை என்றால் அவர்கள் தொடர்ந்து வரம்பு மீறிக் கொண்டே இருப்பார்களாயின், உமது வார்த்தைகளை கவனமாக கேட்காமல், முகம் திருப்பி விடுவார்களாயின், அல்லாஹ் எனக்குப் போதுமானவன் ஆவான் என்று நீர் கூறுவீராக.

**ஃபஇன் தவல்லவ் ஃபகுல் ஹஸ்பியல்லாஹு லாஇலாஹ இல்லாஹு. அலைஹி தவக்கல்(த்)து வஹுவ ரப்புல் அர்ஷில் அழீம்** – அவர்கள் திரும்பிவிடுவார்களாயின், நீர் கூறுவீராக: அல்லாஹ் எனக்குப் போதுமானவனாவான். அவனையன்றி வேறெதுவும் வணங்கத்தக்கதல்ல. நான் அவனிடமே நம்பிக்கை வைத்துள்ளேன். அவன் வல்லமைமிக்க அரியணையின் இறைவனாவான். (9:129)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மறுத்து முகம் திருப்பிச் செல்பவர்களால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை. அவர்களோ அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவர்கள் ஆவார்கள்.

வரலாறும் இதனையே கூறுகிறது. மறுத்து முகம் திருப்பிச் சென்றவர்கள் ஆபத்து மற்றும் அழிவின் முகத்தையே பார்க்கின்றனர். நபிமார்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை. அல்லாஹ்வே அவர்களுக்கு போதுமானவன். அவர்கள் அல்லாஹ்வின் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பிரதிநிதியாவார்கள். காத்தமுல் அன்பியா ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அரசாங்கத்தை நிறுவ முயற்சி செய்தார்கள் (நவூதுபில்லாஹ்) என்ற குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. இதற்கான ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பதிலை இறைவன் திருக்குர்ஆனில் பதிவு செய்துள்ளான்.

உங்களிடம் எனக்கு எந்த தேவையும் இல்லை. அவனே **ரப்புல் அர்ஷில் அழீம்** ஆவான். நான் எனது அரியணையை நிலைநாட்ட முயலவில்லை. மாறாக, அந்த மகத்தான இறைவனின் ஆட்சியை நிலைநாட்ட விரும்புகிறேன். நான் எனது ஆற்றல் எதையும் வெளிப்படுத்திக் காட்டுவதற்காக உங்களை அழைக்கவில்லை. மாறாக, **அர்ஷே அழீம்** – மகத்தான அரியணையின் ரப்பாகிய அல்லாஹ்வின் பெயரால் அழைக்கிறேன். நான் அந்த மகத்தான இறைவனின் நேசன் ஆவேன். உலகின் தற்காலிக ஆட்சியைக் குறித்து எனக்கு என்ன இலக்கு இருக்க முடியும்? அரபு நாடு மட்டுமல்ல; உலகின் எப்பகுதியின் தற்காலிக ஆட்சியை அடைவதும் எனது இலக்கு அல்ல. நாம் இறைவனின் ஆட்சியை நிலைநாட்ட அனுப்பப்பட்டவன். அதையே நிலைநாட்டுவேன். அவனது ஆட்சி உலகில் நிலைநாட்டப்பட்டால் தன்னாலேயே எனது ஆட்சியும் நிலைநாட்டப்பட்டு விடும். ஆனால் உலக அரியணைல்ல. மாறாக, அது முஃமின்களின் உள்ளத்தில் அவர்களின் ஆட்சி நிலைநாட்டப்பட்டது என்பதை உலகம் கண்டது. இன்று முஹம்மதிய மஸீஹின் மூலம் உலகில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக அல்லாஹ் எவ்வாறு தனது அருளை பூர்த்தி செய்துள்ளான் என்று உலகம் கண்டுள்ளது. உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தூதுச் செய்தியை எட்ட வைக்க அஹ்மதிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

நமது எஜமானர் **ஹஸ்பியல்லாஹ்** – எனக்கு அல்லாஹ்வே போதுமானவன் என்று எப்படி கூறினார்களோ, அதே காட்சியை இன்றும் நமது எஜமானரும் வழிகாட்டியுமாகிய ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் பரக்கத்தினால் பார்த்து வருகிறோம். எல்லா வகையான எதிர்ப்புகள் இருந்தும் ஹஸ்பியல்லாஹ்வின் ஒரு புதிய அடையாளத்தை நாம் பார்க்கிறோம். நமது எஜமானரின் போதனையை மேலும் உலகில் பரப்புகிறவர்களாக இருப்பதால் இதனை பார்க்கிறோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கிய அதே குர்ஆன் கரீமின் கட்டளையை உலகில் பரப்புபவர்கள் மூலமே உலகின் அன்பு, சகோதரத்துவம் உருவாக வேண்டும். உலகைப் படைத்த இறைவன் மீது அதன் மூலம் மக்களுக்கு நிச்சய உறுதி உருவாக வேண்டும். அதன் மூலம் அடியார்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை பற்றி மக்களுக்கு கவனம் உருவாக வேண்டும். சாந்தி, சமாதானம் பரவ வேண்டும். இந்த நோக்கத்திற்காகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இக்காலத்தில் வந்தார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் எந்த நோக்கத்திற்காக உலகில் என்னை அனுப்பினானோ அந்த நோக்கம் இதுவாகும். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் பெரும் இடைவெளி உருவாகி விட்டது. அந்த இடைவெளியை அகற்றி அன்பையும் தூய்மையையும் திரும்ப நிலைநாட்டப்பட வேண்டும். சத்தியத்தை வெளிப்படுத்தி மதச் சண்டைகளை தீர்த்து வைத்து சமாதானத்தின் அடிப்படையை நிலைநாட்ட வந்துள்ளேன். மார்க்க உண்மைகள் உலகக் கண்களிலிருந்து மறைந்து போய் விட்டன. அதனை நான் வெளிப்படுத்த வந்துள்ளேன். மன எழுச்சிகளின்கீழ் நசுக்கப்பட்டுள்ள ஆன்மீகத்தை வெளிப்படுத்தி ஆன்மீகத்திற்கு ஒரு முன்மாதிரி காட்ட வந்துள்ளேன். இறையாற்றல் மனிதனுக்குள் மறைந்து கிடந்தாலும் துஆவின் மூலம் அவை வெளிப்படுகின்றன. உள்ளத்து நிலைமைகளின் மூலம் அதனை செய்ய முடியுமேயன்றி சொல்லினால் அல்ல. இத்தகைய மாற்றத்தை உலகிற்கு ஏற்படுத்திக் காட்ட விரும்புகிறேன்.

இது வெறும் வார்த்தையால் நடப்பதன்று. எனவே இந்த மாற்றங்கள் ஓர் அஹ்மதியிடம் உருவாக வேண்டும். வெறும் பேச்சு போதாது. உங்கள் நிலையிலிருந்து தென்பட வேண்டும். தப்லீக் அப்போது தான் பயனளிக்கும்; உண்மையான முஃமின் ஆவதற்கு முயற்சி செய்யப்படுகிறது என்று உணரப்படும்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எல்லாவற்றிற்கும் முதலில் களங்கமற்ற பளிச்சிடும் தவ்ஹீது – எல்லா வகை ஷிர்க்கிலிருந்தும் தூய்மையான தவ்ஹீது வேரறுக்கப்பட்டு விட்டது. அதனை மீண்டும் நடுதல் வேண்டும். இவை அனைத்தும் எனது ஆற்றலால் மட்டும் நடக்காது. வானங்கள் பூமியின் இறைவனாகிய அல்லாஹ்வின் ஆற்றலினாலேயே இது நடக்கும்.

அல்லாஹ் இந்த முக்கியமான நோக்கத்தைப் பெறுவதற்காக நமது எல்லா ஆற்றல்களையும் தகுதிகளையும் பயன்படுத்துபவர்களாக்குவானாக. உலக பயம் நம்மை விட்டு அகன்று போகட்டுமாக. உலக பேராசை நம்மை விட்டு அகன்று போகட்டுமாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை அடைவதற்கு நாம் முயற்சி செய்து கொண்டேயிருப்போமாக.

நான் விளக்கிய ஹஸ்பியல்லாஹ் – எனக்கு அல்லாஹ்வே போதுமானவன் அலைஹி தவக்கல்த்து – நான் அவன் மீது பொறுப்புச் சாட்டினேன் என்பது நமது கவனத்தில் இருக்கட்டுமாக.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 19.02.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Checked by : **Maulavi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**